# ப தி லு ை ர

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**“நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை,**

**உன்னைக் கைவிடுவதும் இல்லை”**

– என்ற விவிலிய வேதாகமத்தில் கூறிய வைரவரிகளுக்கு ஏற்ப

தமிழக மக்களை என்றும் கைவிடாமல்

இந்த மக்களுக்காக இமை மூடாமல்

கண் துஞ்சாமல்

அல்லும் பகலும் அயராது உழைக்கும்

அற்புதத் தலைவிதான்,

அறிவும், ஆற்றலும் –

ஒருங்கே அமையப்பெற்ற

நம் **அம்மா** அவர்கள்.

இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்கின எதிரிகளை போரிட்டு ஜெயித்து ஜனங்களை பாதுகாத்த வீரமங்கை தெபோராள் போல

தமிழ்நாடு முழுவதும் குடும்பம் குடும்பமாக நிலங்களை அபகரித்து நாட்டு மக்களை கொள்ளையிட்ட கொள்ளை கும்பலை ஓடஓட விரட்டி ஜெயித்து தமிழ் மக்களை பாதுகாத்த எங்கள் தங்கத்தாரகை **அம்மா** நாளை இந்திய மக்களை காக்கப்போவதும் தாங்கள் தான் **அம்மா.**

சங்கீதம் **68** அதிகாரம் **6–**வது வசனத்தில்

தேவன் தனிமையானவர்களுக்கு வீடு வாசல்

ஏற்படுத்தி கட்டுண்டவர்களை விடுதலையாக்குகிறார்

என்று கூறப்பட்டதிற்கு ஏற்ப

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் நலிந்த ஏழை மக்கள் பயன் பெறும் வகையில் பசுமை வீட்டுத் திட்டம் மூலம் வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.1.80 லட்சத்தை ரூ.2.10 லட்சமாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

சிறுபான்மை மக்களை யூத இனத்தவரை வேரறுக்க நினைத்த கபடன் ஆமானை கழுமரம் ஏற்றி மக்களை காத்த ராஜமங்கை எஸ்தர் போல.

தமிழ்நாட்டின் சிறுபான்மை மக்களை சிதறடித்து சுகம் கண்ட குள்ளநரிக்கூட்டமான மைனாரிட்டி திமுக ஆட்சியின் கபட நாடகத்தை முறியடித்து சிறுபான்மை மக்களை காத்த எஸ்தராம் எங்கள் அன்னையே. தாங்கள் இந்தியத் திரு நாட்டில் எந்த மாநிலமும் செய்யாததை அதாவது சிறுபான்மையினரான கிருஸ்துவ மக்கள் தங்களின் புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்றுவர 2011 மற்றும் 2012–ல் 1000 பேருக்கு ரூ.2 கோடி உதவித் தொகை வழங்கியும் தொடர்ந்து ஆண்டு தோறும் ரூ. 1 கோடி வழங்கி வருகிற அருட்கொடையும் தாங்கள்தான் **அம்மா.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நான் தொழிலாளர்களின் தோழன் –

சாமன்ய மக்களின் சம்பந்தி –

எனக் கூறி –

மக்களை ஏமாற்றி –

ஆட்சி அதிகாரத்திற்கு வந்து

நாட்டை கொள்ளையடித்து

தம் குடும்பத்தை

உலகக் கோடீஸ்வரர்களின்

பட்டியலில் இடம் பெறச் செய்துள்ளார்.

அவருடைய குடும்ப வாரிசுகள்

எல்லாம் – ஏதோ

புரூனே நாட்டு சுல்தான்கள்

போல – வெளிநாட்டுக்

கார்களிலே பவனி வந்து –

இன்று சி.பி.ஐ. வசம்

சிக்கிக் கொண்டுள்ளனர்.

ஆனால், சத்தம் இன்றி – பல

சாதனைகள் புரிந்து வரும்

நம் சத்தியத் தாய்

**அம்மா** அவர்கள்,

ஏழை – எளிய மக்களின்

வாழ்க்கைத் தரம் உயரவும், –

எல்லா தரப்பு மக்களின்

மேம்பாட்டுக்காகவும் –

நல்ல பல திட்டங்களை

நாளும் தந்து கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

இலங்கை மண்ணிலே

ஈழத் தமிழர்களைக் கொன்று

குவித்த ராஜபக்சேவுக்கு –

டெல்லியிலே சிவப்புக் கம்பள வரவேற்பு

ஏற்குமா தமிழினம்!..

இங்கே, ஆட்சியிலிருந்த

காங்கிரசின் கூட்டாளி கருணாநிதி

ஓர் ஓரங்க நாடகத்தை அரங்கேற்றினார்.

கால்மாட்டிலே மனைவியும், தலைமாட்டிலே துணைவியும் அமர்ந்திருக்க அரைநாள் உண்ணா விரதம் எனும் அதி அற்புத நாடகத்தை நடத்தி, போர் முடிந்தது என அறிவித்த வேளையில், சிங்கள வெறிக் கூட்டம் தமிழ்ச் சொந்தங்களை கொத்துக் கொத்தாய் கொன்று குவித்தது.

" இதைப் பார்க்கும் போது
நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறனும் இன்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி" –

– என்ற பாரதியின் பாடல் வரிகள் தான் நினைவுக்கு வருகிறது. ஆனால், புரட்சித்தலைவி நம் **அம்மா** அவர்கள்,

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் தமிழர்க்கு –
– இன்னல் விளைவித்தால்
சங்காரம் நிஜமென்று
– சங்கே முழங்கு"

– என்ற பாவேந்தரின் புரட்சி வரிகளுக்கு ஏற்ப இனப்படுகொலை செய்த இலங்கை அரசை கண்டித்து இதே சட்டப் பேரவையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

“போர்க்குற்றம் புரிந்த கூட்டத்தினரை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும்.

ஈழத் தமிழருக்கு உரிமைதர மறுக்கும் இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் எனத் துணிச்சலுடன் மாண்புமிகு **அம்மா** அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத்தை அகிலமே பாராட்டியது. உலகத் தமிழர்கள் எல்லாம் ஒருசேர நன்றி தெரிவித்தனர். அது மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழர்களின் உண்மையான பாதுகாவலர் யார் ? போலித்தனமான தலைவர் யார் ? என்பதை இனம் கண்டு கொண்டார்கள்.

அதனால் தான் தாயே!

“ நீங்க நல்லா இருக்கணும்

நாடு முன்னேற – இந்த

நாட்டில் உள்ள தொழிலாளர்களின்

வாழ்வு முன்னேற”

– என தமிழ் நெஞ்சங்களெல்லாம் எண்ணி மகிழ்கிறது.

தூர்வாரி, தூர்த்தெடுத்த நீரை குடிநீராக பயன்படுத்தியதால், தூற்றுக்குடி என்பது மருவி தூத்துக்குடி என பெயர் வந்தது. தூத்துக்குடி நகருக்கு வல்ல நாடு என்ற இடத்தில் இருந்து தாமிரபரணி ஆற்று நீரை முதன் முதலில் கொண்டுவந்தவர் அப்போதைய நகர சபைத் தலைவர் ராவ்பகதூர் திரு. குரூஸ் பர்னாந்தஸ் அவர்கள். அதனால் அவர் குடிநீர் தந்த கோமகன் என நன்றியுடன் அழைக்கப்பட்டார்.

இரண்டாவது திட்டம் மூலம் தூத்துக்குடிக்கு குடிநீர் தந்தவர் மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். சமூக நீதி காப்பதில் பெரியாரைப் போலவும் அறிவாற்றலில் அண்ணாவைப் போலவும், கொடை ஆளுகைத் தன்மையில் புரட்சித்தலைவர் போலவும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது தாய் தூத்துக்குடி மக்களுக்காக மூன்றாவது நான்காவது லைப் லைன் திட்டம் தந்தார்கள்.

இதே மாமன்றத்தில் 1989–ல் தி.மு.க உறுப்பினர் பெரியசாமி தூத்துக்குடிக்கு கடல் நீரை உப்பு நீராக மாற்றி தர வேண்டும் என தத்து பித்தாக உளரினார். அவர் பேசிய ஒரே பேச்சு இந்த தத்து பித்து பேச்சுதான். அந்த குறையையும் போக்கி, கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் வகுத்து அதன் மூலம் 100 மில்லியன் லிட்டர் அமிர்தினும்

இனிய குடிநீர் தினம் தூத்துக்குடி மக்களுக்கு வழங்க உத்தரவு இட்டு வரலாறு படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

பெற்ற தாய் கூட அழுகிற பிள்ளைக்குத்தான் பால் கொடுப்பாளாம்.

உதவி வேண்டி செல்பவர்கள், என்ன கொடுப்பான் எதைக் கொடுப்பான் என்று இவர்கள் எண்ணும் முன்னே பொன்னும் கொடுப்பான் பொருளும் கொடுப்பான் என்று கொடைக்கு இலக்கணமான கர்ணன் இருந்தானாம்.

என்ன கொடுத்தோம் எதைக் கொடுத்தோம், யாருக்கு கொடுத்தோம் என்பதை அறியாமல் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

என்ன கொடுக்க வேண்டும், எதைக் கொடுக்க வேண்டும், யாருக்கு கொடுக்க வேண்டும் என்பதை, பெறக் கூடியவர் தெரியாமலும் எண்ணாமலும், தன்னிடம் வராமல் இருந்தாலும் வலிய சென்று வாரி வழங்கும் தன்மையால் உயர்ந்து நிற்கும் உள்ளத்துக்கு உரியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்.

முத்து குளிப்பதொரு தென்கடலிலே

மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே

– என்று பாரதியாரால் பாடப்பட்ட தூத்துக்குடிக்கு மேலும் சிறப்பு செய்யும் வகையில் நேற்று 7.5.2013 அன்று இந்த மாமன்றத்தில் தூத்துக்குடியில் 6000 ஏக்கரில் "கனரக தொழிற் பூங்கா" அமைத்திட அறிவித்து ஆணையிட்ட ஏந்தலே! எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

சங்கீதம் 113 . 7–8 வசனத்தில்

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கி விடுகிறார்

எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

அவனைப் பிரபுக்களோடும் தமது ஜனத்தின்

அதிபதிகளோடும் உட்காரப் பண்ணுகிறார்

என்று கூறப்பட்டுள்ளது.

அதற்கேற்ப சிறுபான்மை இனத்தைச் சார்ந்த சாதாரண தொண்டனான என்னை தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினராக்கி, உழைக்கும் தொழிலாளர்கள் நலன் காக்கும் தொழிலாளர் நலத்துறைக்கு அமைச்சராக்கி அழகு பார்த்து வரும் அன்னையே!

வரலாறு படைத்த இந்த மாமன்றத்தில் தொழிலாளர் நலத் துறையின் மானிய கோரிக்கையை மூன்றாவது முறையாக தாக்கல் செய்யும் அரிய வாய்ப்பை சாமானியனான எனக்கு தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களே!

வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் என்று அன்று வள்ளலார் கலங்கினார். இன்று ஆலயங்கள் தோறும் அன்ன சத்திரம் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சென்னை மாநகராட்சியில் மட்டுமா **அம்மா உணவகம்** என்று ஏங்கிய அனைத்து மாநகராட்சி மக்களுக்கும் **அம்மா உணவகங்கள்** அமைத்திட ஆணையிட்ட கருணைக் கடலே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் உங்கள் பொற்பாதம் பணிந்து எனது பதிலுரையைத் துவக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

**வளர்ந்த நாடுகளின் வெற்றிக்கு காரணம் உழைப்புதான்.**

**உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள், கசப்பாக இருக்கலாம்.**

**ஆனால் அதன் கனிகள் இனிப்பானவை.**

உழைப்பு மட்டுமே மக்களை உயர்த்தும் என்பது மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் பொன்மொழி.

முன்னேற்றம் என்பதெல்லாம் உழைப்பவர் உழைப்பதனாலே – என்ற புரட்சித் தலைவர் பாடல் வரிகளின்படி

நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைத்து தமிழ்நாட்டை எல்லா துறையிலும் முதன்மை மாநிலமாக மாற்ற நீங்கள் அயராது பாடுபட்டுகொண்டு இருக்கிறீர்கள் **அம்மா**.

மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு, மக்கள் வாழ்வு வளம் பெறவும், மக்கள் நலனை பேணி பாதுகாக்கவும், பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி இன்று தமிழக மக்கள் யாரிடமும் கையேந்தாத நிலையை உருவாக்கி தமிழக மக்களின் தாயாக திகழ்கிறீர்கள் **அம்மா**.

புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் சிந்தையில் உதித்த 2023 தமிழ்நாடு தொலை நோக்கு திட்டத்தின் நோக்கம் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றுவது ஆகும். இத்திட்டம் வேகமான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் அதன் பயன்களை மக்களுக்கு எடுத்து சென்று சேர்ப்பதாகும். இது அம்மா அவர்களின் லட்சிய திட்டமாகும்.

தமிழ்நாடு அரசு துரிதமான பொருளாதார வளர்ச்சியுடன் தொழிலாளர் உரிமைகளை காப்பதை கொள்கையாக கொண்டுள்ளது.

உழைக்கும் தோழர்களே ஒன்று கூடுங்கள்
உலகம் நமது என்று சிந்துபாடுங்கள்.
மேடுபள்ளம் இல்லாத சமுதாயம் காண,
அம்மா சொன்ன வழி கண்டு
நன்மை தேடுங்கள் ஆம் அன்னையே
உங்கள் வழியை பின்பற்றியவர்களுக்கு
வாழ்வில் துன்பம் என்பதே இல்லை.

தொழிலாளர் நலச்சட்டங்களை திறம்பட அமல்படுத்துவதற்கும் நிர்வாக திறனை மேம்படுத்துவதற்கும், செயல்திறன் மிக்க சமரச முயற்சியை, தொழிலாளர்கள் எளிதாக அணுகுவதற்கும், தொழிலாளர் துறையை விரிவாக்கவும் சீரமைப்பு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்ற இலக்கினை அடைய தொழில் அமைதியை பராமரிப்பது அவசியமாகிறது. மாண்புமிகு இதயதெய்வம் **அம்மா** அவர்களின் ஆட்சியில் தொழில் அமைதி பேணப்பட்டு இன்று தமிழகம் தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநிலமாக மாறி, தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலமாக முன்னேறி வருகிறது.

தொழிலாளர் துறை தனது நீண்ட அனுபவத்தையும், சிறந்த வசதி வாய்ப்புகளையும் கொண்டு தொழிற்தாவாக்களை சுமூகமாக தீர்த்து வைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

மாண்புமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் இரண்டு ஆண்டுகால ஆட்சியில் இத்துறையின் சமரச அலுவலர்கள் **8663** தொழிற்தாவாக்களை சுமூகமாக தீர்த்து வைத்துள்ளனர். பல்வேறு தொழிற்சாலைகளில் நடைபெற்ற **69** வேலை நிறுத்தங்கள் மற்றும் **16** கதவடைப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் அரசால் சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டு தமிழகத்தில் தொழில் அமைதி பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் ஆட்சிக்காலம் தொழிலாளர்களுக்கு மட்டும் பொற்காலமல்ல. தமிழக மக்கள் அனைவருக்கும் பொற்காலம். கூடிய விரைவில் இந்திய மக்களுக்கும் பொற்காலமாக அமையும்.

"உயர்ந்தவர் யாரும் சுயநலமிருந்தால்
தாழ்ந்தவராவார் தரத்திலே
உழைப்பால் பிழைப்போர் தாழ்ந்திருந்தாலும்
உயர்ந்தவராவார் குணத்தாலே"

– என்ற புரட்சித் தலைவரின் பாடலுக்கு ஏற்ப உழைப்போருக்கு சட்டத்தின் மூலம் உரிமைகளை நிலை நாட்ட

தமிழ்நாடு முழுவதும் 12 தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்குகிறது. இவைகளின் கட்டமைப்பு வசதிக்காக 4.58 கோடி ரூபாய் ஒதுக்கியதுடன் கூடுதலாக 34 பணியிடங்களை ஏற்படுத்தி தொழிலாளர் நீதி மன்றங்களில் தேங்கிய வழக்குகளை விரைந்து முடிக்க வழிவகை செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னைக்கு வரும் தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் தங்குவதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் கட்டடம் கட்டிய கொத்தனாரை கொண்டே திறந்து

வைக்கப்பட்ட ஜீவா இல்லம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆணையின்படி ரூ.30 லட்சம் செலவில் நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு 21.11.2012 அன்று திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

அமைப்புசார்ந்த தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களை அமல்படுத்த தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 21.11.2012 அன்று நடைபெற்ற இவ்வாரியக் கூட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகையை உயர்த்தி வழங்கவும், புதிதாக மரண உதவித் தொகை ரூ.25,000/– ஆக வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் ஐ.சி.டி.எஸ். உடன் பாலர் பள்ளிகளையும் இணைத்து தொழிலாளர் நல நிதிக்கு பங்களிப்பு தரும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு புதிய வேலைக்கேற்ற திறன் பயிற்சி அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

"வல்லோர்கள் சுரண்டும் பொல்லாத கொடுமை இல்லாமல் மாறும் ஒரு தேதி – அன்று இல்லாமை நீங்கி எல்லோரும் வாழ இந்நாட்டில் மலரும் சமநீதி" – என்ற புரட்சித்தலைவரின் பாடல்படி, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான வாரியங்களில் தனித்தனியாக வாரியத் தலைவர்களை நியமித்ததின் மூலம் கோடிக் கணக்கான தொகையை விரயமாக்கியது கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி. ஆனால் மாண்புமிகு **அம்மா** அவர்களின் ஆட்சியில் அந்தத் தொகை முழுவதும் தொழிலாளர்களின் நலத்திட்டங்களுக்கே செலவிடப்படுகிறது.

அமைப்புசாரா நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு நேரடியாக கிடைக்க உதவித் தொகைகள் வங்கிகள் மூலம் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி திருச்சி, காஞ்சிபுரம், கோயமுத்தூர், திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் முதல் கட்டமாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் இதர மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

60 வயது பூர்த்தி அடைந்த அமைப்புசாரா நல வாரிய உறுப்பினர்களுக்கு 2005–ல் மாண்புமிகு **அம்மா** அவர்களின் ஆட்சியில்தான் ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

தற்போது வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தினை ரூ.500 லிருந்து ரூ.1000 –ஆக உயர்த்தி 27.12.2011 முதல் வழங்க உத்திரவிட்டதும் மாண்புமிகு **அம்மா** அவர்கள் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

கடந்த கால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் வாரியங்களில் செயல்பாடுகள் மிகவும் சீர்கெட்டு இருந்தது. அதனால் தான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் இந்த நல வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் சீரமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பு ஏற்ற நாள் முதல் 31.03.2013 வரை அமைப்பு சாரா நல வாரியங்களில் 6.18 லட்சம் தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி காலத்தில் 2.22 லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படாமல் இருந்தது. தற்போது அதையும் சேர்த்து 9.31 லட்சம் பயனாளிகளுக்கு ரூ.218.18 கோடி ரூபாய்க்கான நலத் திட்ட உதவிகளை வழங்கி இதய தெய்வம் **அம்மா** அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது.

ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 5 ஆண்டுகளில் 12 லட்சத்து 54 ஆயிரத்து 877 பயனாளிகளுக்கு ரூ.319 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் 2012–ல் சட்டமன்றத்தில் விதி 110–ன் கீழ் அறிவித்த அறிவிப்பின்படி தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்ஸி ஓட்டுனர்கள் நல வாரியம் என்ற வாரியத்தின் பெயரை தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுனர்கள் நல வாரியம் என பெயர் மாற்றம் செய்து. அதிகப்படியான ஓட்டுனர்கள் நல வாரியத்தில் பதிவு செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள்.

2013–ம் ஆண்டு முதல் ஓட்டுனர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் ஆண்டு ஒன்றுக்கு 60 பேருக்கு ரூ.12.5 லட்சம் செலவில் கனரக வாகனங்களை இயக்குவதற்கு தமிழ்நாடு சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம்

பயிற்சி அளிக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்களுக்கு கட்டுமான தொழில் சம்பந்தமாக தேவையான திறனை மேம்படுத்தவும் அவர்களுக்கு மறு பயிற்சி வழங்கவும் தமிழ்நாடு கட்டுமான கழகத்தின் பயிற்சி திட்ட நடவடிக்கைகளை நடத்தி செல்வதற்காக தொழிலாளர் துணை ஆணையர் நிலையில் இயக்குநர் ஒருவரை நியமனம் செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் **2013**–ஆம் ஆண்டு முதல் கட்டுமான நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகள் அடிப்படை எலக்ட்ரிக்கல் பயிற்சி, அடிப்படை வெல்டிங், பிளம்பர், மரவேலை போன்ற பல்வேறு பிரிவுகளில் சென்னை, தர்மபுரி, வேலூர், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி பெற ரூ. **11.44** லட்சம் தொகையை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அமைப்பு சாரா நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தங்கும் வசதியுடன் அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் கூடிய பள்ளி துவங்குவதற்கு மாண்புமிகு

தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். பள்ளி துவங்குவது குறித்து ஆராய குழு ஒன்று அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்ட உடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைப்பு சாரா நல வாரியங்களில் அதிகளவில் தொழிலாளர்களை பதிவு செய்யவும் அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகளை தொழிலாளர்கள் அறியும் வகையிலும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்த **2013–**ஆம் ஆண்டு **32** லட்சத்து நான்காயிரத்து **250** ரூபாய் தொகையை மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஒப்பளிப்பு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

அதுபோல **2013** ஆண்டு முதல் அமைப்புசாரா நல வாரியங்களின் உறுப்பினர்களின் பிள்ளைகளின் பட்ட மேற்படிப்பு தொழிற் கல்வி பட்டபடிப்பு, தொழிற் கல்வி பட்ட மேற்படிப்பு ஆகிய படிப்புகளுக்கு தற்போது வழங்கப்படும் உதவித் தொகையுடன் மேலும் ரூ.**2000** கூடுதலாக உயர்த்தி வழங்க மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் அமைப்புசாரா நல வாரிய உறுப்பினர்கள் பணியின் போது விபத்தின் காரணமாக ஊனம் ஏற்படும் நேர்வில் செயற்கை உறுப்புகள்

மற்றும் சக்கர நாற்காளிகள் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் **25.3.2013** அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த நடவடிக்கையினால் ஐ.சி.ஐ.சி.ஐ. லம்பார்டு காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த **395** கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு ரூ. **3.51** கோடி தொழிலாளர்களுக்கு பெற்று வழங்கப்பட்டுள்ளது என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைப்புசாரா நல வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி காலம்தான் பொற்காலம். கடந்த கால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியின் காலம் இருண்டகாலம்.

ஆனால் முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருந்துகொண்டு, இங்கே பேசாமல் கடந்த கால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் வாரிய உறுப்பினர்களுக்கு அதிகப்படியான நன்மைகள் செய்ததாக திரு. கருணாநிதி பத்திரிக்கை வாயிலாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில்

“தோட்டம் காக்க போட்ட

வேலி பயிரை மேய்வது போல்’’ – தொழிலாளர்களுக்கு உதவிடும் உன்னத நோக்கம் கொண்ட சங்கங்கள் தங்கள் சேவையை மறந்து அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு அரசு வழங்கிய நலத் திட்ட உதவித் தொகைகளை மோசடி செய்து தொழிலாளர்களை ஏமாற்றியது குறித்து புகார்கள் பெறப்பட்டன.

“ஒரு  தவறு செய்தால்

அதை தெரிந்து செய்தால்

அவன் தேவன் என்றாலும்

விடமாட்டேன்” – என்ற புரட்சித்தலைவரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சி காலத்தில் நடந்த மோசடிகளின் உண்மைத் தன்மையை அறியும் பொருட்டு தணிக்கை செய்ய உத்தரவிட்டதில் சிவகங்கை, ராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இயங்கும் சில சங்கங்கள் சுமார் ரூ. 3 கோடியே 42 லட்சத்து  46 ஆராயிரத்து 68 ரூபாய் மோசடி செய்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

மோசடி செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மோசடி சங்கங்கள் மீது காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டு உரிய பிரிவுகளின் கீழ் மோசடி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மற்ற மாவட்டங்களிலும் இவ்வாறு தணிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. கண்டுப்பிடிக்கப்படும் போலி சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க தொழிலாளர் நலத்துறைக்கு மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

"ஆளுக்கொரு வீடு கட்டுவோம் அங்கு
ஆன கலைகளை சீராகப்பயிலுவோம்" – என
அன்று பாடியது இன்று நனவாகிறது – ஆம்

பீடி தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக மாநில அரசு வழங்கிய மானியம் ரூ. 5000/– ஐ 12 மடங்கு உயர்த்தி 60000/– ரூபாயாக வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் பீடி தொழிலாளர்கள் வீடு கட்டுவதற்கு மொத்த செலவினத் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் பெறுவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஒரு தேசத்தின் எதிர்காலம் குழந்தைகளையேச் சார்ந்துள்ளது.

ஓடி விளையாடு பாப்பா
நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா, ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

– என்ற பாரதியின் பாடலின்படி,

குழந்தைகள் ஆரோக்கியமானவர்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் கல்வி அறிவில் மேம்பட்டு ஒழுக்கமானவர்களாகவும், மற்றும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்தால் மட்டுமே அத்தேசத்தின் எதிர்காலத்தை உறுதி செய்ய இயலும். எனவே குழந்தைகளின் நலனை பாதுகாப்பது சமுதாயத்தின் கடமையாகும்.

குழந்தை தொழிலாளர் முறை என்னும் சமூக அவலத்தை முற்றிலும் நீக்கிட அனைவரும் உறுதி ஏற்போம். குழந்தை தொழிலாளர் முறை அகற்றிடுவோம்.

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி அவர்கள் வாழ்வில் ஒளியேற்றுவோம் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் வைர வரிகளுக்கு ஏற்ப குழந்தைத்

தொழிலாளர் என்ற சமுதாய அவலத்தை களைவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்களின் அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குழந்தை தொழிலாளர் என்ற சமுதாய அவலங்களை களைவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆட்சிக் காலத்தில் தீவிரமாக குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்புக்கான திட்டம் தீட்டப்பட்டு அதனால் குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பு முறை மாநிலத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் ஒவ்வொரு வருடமும் ஜூன் 12 ம் தேதி குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

குழந்தை தொழிலாளர்களாக மீட்கப்பட்ட குழந்தைகளும் மற்றும் முறையான பள்ளிகளில் பயிலும் அனைத்து முன்னாள் குழந்தை தொழிலாளர்களும் கலை, அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவ உயர் கல்வியினை பயிலும் பொருட்டு மாதம் தோறும் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை ரூ. 250—ஐ ரூ. 500 ஆக உயர்த்தி வழங்கி 566 குழந்தைகள் பயன்பெற வகை செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை ரூ 15 கோடி செலவில் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டதின் படி குழு ஒன்று அமைக்கப்பட்டது. குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன் தொழிலாளர் கல்வி நிலையத்தினை தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் தொழிலாளர் கல்வி நிலையத்தின் வகுப்பறைகள் அனைத்திலும் ஒளிதிரைகள் பொருத்தப்பட்டு நவீன வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு தமிழக முதல்வர் **அம்மா** அவர்கள் தமிழகத்தை தொழில் துறையில் முன்னேற்றம் காண எடுத்த சீரிய நடவடிக்கையால் புதிதாக 4534 புதிய தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 70 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற்று பலன் அடைந்துள்ளனர். 5262 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 86,996 தொழிலாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் உடல் நலன், பாதுகாப்பு மற்றும் நல வசதிகள் ஆகியவற்றை பாதுகாக்க தொழிற்சாலை சட்டங்கள் தொழிற்சாலைகளில் அமல்படுத்தும் சேவையை தொழில் வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை சிறப்பாக கண்காணித்து வருகிறது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விருதுநகர் மற்றும் சிவகாசியில் பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் ரசாயனங்களை கவனமாக கையாண்டு விபத்து இல்லாமல் பணிபுரிய பயிற்சியளிப்பதற்கு சிவகாசியில் ஒரு பயிற்சி மையம் 28.4.2012 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள்ஆணைப்படி திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி பயிற்சி மையத்திற்கு சொந்தமாக கட்டிடம் கட்டுவதற்கும் தேவையான பணியாளர்களை உருவாக்குவதற்கும் 2013–ஆம் ஆண்டில் 2 கோடியே 36 லட்சத்து 76 ஆயிரத்து 338–ரூபாயை ஒப்பளிப்பு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் பாதுகாப்பு செயல் திறனை மேம்படுத்திடவும் தொழிற்சாலை நிர்வாகத்திறனை ஊக்கப்படுத்தவும் தற்போது வழங்கப்படும் மாநில பாதுகாப்பிற்கான முதல் பரிசு தொகையினை

ரூ. 2500 லிருந்து ரூ. 5000 ரூபாயாகவும் இரண்டாவது பரிசு தொகையினை ரூ. 1500 லிருந்து ரூ. 4000 ஆகவும் உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தொழிற்சாலை ஆய்வக துறை பணிகள் மிகவும் செவ்வனே செயல்பட சேலத்தில் 51 லட்சத்து 61 ஆயிரத்து 290 ரூபாய் செலவில் ஒரு கூடுதல் இயக்குனர் தொழில்வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலகமும், திருப்பூரில் 22.41 லட்சம் ரூபாய் செலவில் ஒரு இணை இயக்குனர் தொழில்வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார அலுவலகமும் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துக்களை தடுக்கும் நோக்கில் பட்டாசு தொழிற்சாலையை கண்காணிக்க 55.9 லட்சம் ரூபாய் செலவில் தொழில் வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குனர் தலைமையில் நடமாடும் குழு அமைக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் 31.1.2013 அன்று ஆணையிட்டுள்ளார்கள்.

இக்குழு இதுவரை 179 பட்டாசு ஆலைகளை ஆய்வு செய்து சட்ட ரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளது.

மேலும் தொழிலாளர்கள் விபத்து இல்லாமல் பணிபுரிய உயர்ந்த உழைப்பாளர்களுக்கான விருதின் எண்ணிக்கையை 2013–ஆம் ஆண்டு முதல் 24–ல் இருந்து 43 ஆக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பட்டாசு தயாரிக்கும் தொழில் ஊறு விளைவிக்கும் தொழில் என தொழிற்சாலைகள் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வரப்பட்டு மீறுபவர்களுக்கு சிறைத்தண்டனை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விபத்தினை தடுப்பதற்கான வழிமுறைகள் தொழிற்சாலைகள் விதிகளில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு பட்டாசு ஆலைகளில் விபத்தினை தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து தொழிலாளிகளை பாதுகாத்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்க சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதற்காக ரூ.13.45 கோடி செலவில் ஒரு தொழில்வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார முதுநிலை கூடுதல் இயக்குனர் தலைமையில் அமலாக்க பிரிவு ஒன்றை ஏற்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சி காலத்தில் கட்டட தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கான நடவடிக்கை எதுவுமே எடுக்கப்படவில்லை.

கட்டடம் மற்றும் பிற கட்டுமானத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் 2116 புதிய கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொழில் வழி பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கு சொந்த அலுவலகம் ரூ. 15 கோடி செலவில் கட்டுவதற்கு கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ வளாகத்தில் இடம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு தொழிலாளர் மேம்படையவும் அதன் மூலம் தமிழகம் தொழிற் வளர்ச்சி கண்டிட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஒப்பற்ற சேவையை தமிழகத்திற்கு வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டில் 37 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் கோயம்புத்துார், மதுரை, தஞ்சாவூர் துாத்துக்குடி மற்றும் கடலுார் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் ஆட்சி காலத்தில் தான் சொந்த கட்டிடங்கள் கட்டப்பட்டன.

2011–2012 ஆம் நிதியாண்டில் நாகப்பட்டினம், நாகர்கோயில், புதுக்கோட்டை, ஈரோடு விருதுநகர், அரியலுார், வேலுார், திருவண்ணாமலை, கரூர் மற்றும் நாமக்கல் ஆகிய 10 வேலைவாய்ப்பு அலுவலங்களுக்கும் புதிய கட்டிடம் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ரூ.15கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளதற்கிணங்க அதற்கான கட்டிடம் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

2012–13–ம் நிதியாண்டில் சேலம், திருச்சி, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் பெரம்பலூர்ஆகிய மேலும் 5 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 7.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆனால் கடந்த மைனாரிட்டி தி.மு.க அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இளைஞர்கள் தனியார் துறையில் வேலை பெற்றிட வழிவகை செய்யும் பொருட்டு ஒரு இணையதளம் உருவாக்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் தற்போது ரூ. 75 லட்சத்தினை ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். தற்போது அதற்கான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பகத்தில் தனியார் துறையில் பணிநியமன உதவி பிரிவினை ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ரூ. 1 கோடியே 93 லட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை

பிறப்பித்துள்ளார்கள். இதற்கான பூர்வாங்க பணிகளும் நடைபெற்று வருகிறது.

**2008, 2009, 2010** ஆகிய ஆண்டுகளில் வேலை வாய்ப்பு பதிவுகளை புதுப்பிக்க தவறிய பதிவுதாரர்களுக்கு பதிவை புதுப்பிக்க சலுகை வழங்கி மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டதற்கிணங்க **1** லட்சத்து **27** ஆயிரத்து **695** பதிவுதாரர்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றிட திறன்மேம்பாடு என்பது தற்பொழுது மிகவும் தேவை என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் **2013–14** ம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் ரூ.**100** கோடி நிதியினை ஒதுக்கி தந்து ஆணையிட்டு எதிர்காலத்தில் தமிழகம் ஏற்றம் கண்டிட வழிவகை செய்துள்ளார்கள்.

மேலும் தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் **2023**–ல் திறன் மேம்பாட்டிற்காக ரூ. **11** ஆயிரம் கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

மேலும் வடிவமைப்பு திறன் பயிற்சியை தொடர்ந்து அளிப்பதற்காக **2013–14** ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ **8** கோடி நிதியை ஒதுக்கி தந்துள்ளார்கள்.

இளைஞர்களுக்கு உலகதரத்திலான திறன்களை அளித்து அவர்களுக்கு உலகளவில் பணி பெறும் தகுதியுடையவர்கள் ஆக்கிட சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதியுதவிகளையும், தொழிட்நுட்ப உதவிகளையும் பெற அரசு நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் 2013–14 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்துள்ளார்கள்.

தானே சுயமாக தொழில் முனைவோர் பயிற்சி திட்டத்தின் மூலம் இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு அளித்திட ரூ. 50 கோடி நிதியினை ஒதுக்கியும் மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம், பல வன்மைகள் செய்வோம்

– என்ற பாரதியாரின் பாடலுக்கு ஏற்பவும்

விஞ்ஞானத்தை வளர்க்க போரேண்டி – மேநாட்டானை

விருந்துக்கு அழைச்சி காட்டப்போரேண்டி – என்று நகைச்சுவை மன்னர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் கனவு கண்டு பாடியதை நனவாக்கும் வண்ணம் மேநாட்டவர்களை அழைத்து, அதன் மூலம் 14.5.2012 மற்றும் 5.12.2012 ஆகிய தேதிகளில் 17 புரிந்துணர்வு ஒப்புந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு இதன் மூலம் 1 லட்சத்து 46 ஆயிரம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வாய்ப்பை மாண்புமிகு **அம்மா** அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

வெளிநாட்டு வேலையை விரும்பும் தமிழர்கள், போலி முகவர்களிடம் ஏமாறாமல் இருக்கும் பொருட்டு முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களினால் 30.11.1978 தொடங்கப்பட்டது தான் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

இந்நிறுவனத்தில் 31.3.2013 வரை 31,950 மனுதாரர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி உயிர்ப்பதிவேட்டில் உள்ளனர். 16.5.2011 முதல் 31.3.2013 முடிய, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் 3458 நபர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி பதிவு செய்துள்ளனர்.

16.5.2011 முதல் 31.3.2013 முடிய அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 392 மனுதாரர்களை பல்வேறு நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக

வாழ்வோம் இந்த நாட்டிலே – என்ற பாரதியாரின் பாடலிற்கிணங்க

மகளிர் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டு, கடலூர் மாவட்டத்திலுள்ள அரசு மகளிர் தொழில் பயிற்சி நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ரூ 2 கோடியே 30 லட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை பிறப்பித்து தற்போது கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது.

அனைத்து அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் வாயிலாக முறையான பயிற்சிகள் வழங்கி திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கி வேலையின்மை பிரச்சனையை குறைக்கவும் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் மூலம் பல்வேறு முறையான பயிற்சி திட்டங்களை வழங்கி திறமைமிக்க தொழிலாளர்களை உருவாக்கும் பொறுப்பினை இத்துறையின் பயிற்சிப் பிரிவு எடுத்து வருகிறது.

எல்லோருக்கும் எல்லாம் வழங்கி கல்வியில் மேம்பாடு கண்டு எதிர்கால வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் வகையில்அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்திடவும் அவர்கள் திறன் பயிற்சியில் ஈடுபாட்டுடன் பங்கேற்கவும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஏழை மற்றும் சமூகத்தில் பின் தங்கிய மாணவர்களே படிப்பதால் இம்மாணவர்கள் ஊக்கத்துடன் பயிற்சி பெற கணினி சார்ந்த கல்வி பயிலும் மாணவர்களுக்கு ரூ. **3.56** கோடி செலவில் விலையில்லா கணிப்பொறிகள் மற்றும் அனைத்து மாணவர்களுக்கும் ரூ. **6.6** கோடி செலவில் விலையில்லா மிதி வண்டிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் அவர்களுக்கு இரண்டு செட் விலையில்லா சீருடையும் ஒரு செட் காலணியும் வழங்க ரூ.**3.65** கோடியை மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஒப்பளிப்பு செய்துள்ளார்கள். அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் விதமாக இம்மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை ரூ. **100/–** ல் இருந்து ரூ.**500** ஆக **1.8.2012** முதல் உயர்த்தி வழங்க உத்தரவிட்டதுடன் அதற்கு நிதியாக ரூ. **12.94** கோடி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் மாநில அளவில் நடக்கும் திறனாய்வு போட்டியில் முதலிடம் பெறும் சிறந்த பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரொக்க பரிசு தொகை ரூ. 5000–த்தை ஐந்து மடங்கு உயர்த்தி ரூ. 25,000 –ஆக வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் வழங்கப்பட்டு வந்த நற்பயிற்றுனர் விருதுக்கான ரொக்க பரிசுத்தொகை ரூ.1000 –த்தை பத்து மடங்காக உயர்த்தி ரூ.10,000 –ஆக வழங்க ஆணை பிறப்பித்து தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணை பிறப்பித்தபடி பயிற்சியாளர்களுக்கான ரொக்க பரிசுத்தொகை 21.2.2013 அன்று வழங்கப்பட்டன.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு பள்ளி வகுப்பறைகள் நல்ல முறையில் இருந்தால் அவர்களின் கவனம் சிதறாமல் இருக்கும் என்ற அடிப்படையில் வகுப்பு அறைகளுக்கு புதிய அறைகலன்கள் வாங்குவதற்காக 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ரூ 75 லட்சம் ஒப்பளிப்பு செய்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாறிவரும் புதிய தொழில் நுட்பங்களுக்கு ஏற்ற கல்வியை வழங்கும் வகையில் 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை புதுப்பிக்கவும், புதிய இயந்திரங்கள் கருவிகள் வழங்கி நவீனப்படுத்தவும் ரூ. 15 கோடி நிதி ஒதுக்கீடு செய்து புதிய தொழில் புரட்சிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் வித்திட்டு ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளில் 50 சதவீதம் இருக்கைகள் அரசு ஒதுக்கீட்டில் மாவட்ட கலந்தாய்வு முறையில் நிரப்பவும் இவ்வாறு நிரப்பப்படும் நகர்புறத்தில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 12,000/–மும் கிராமப்புற மாணவர்களுக்கு ரூ. 10,000/–மும் என ஏழை மாணவர்கள் சார்பாக பயிற்சி கட்டணத்தை அரசே செலுத்திட மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். 2012–2013 கல்வி ஆண்டில் 3781 பேர் பயிற்சி கட்டணம் இன்றி பயன் பெற்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்றுவரும் மாணவர்களுக்கான இறுதித் தேர்வுகளை மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சி கழகம் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மட்டுமே நடத்தி வந்தது. இதனால் கேள்விகளை புரிந்து கொள்ள நம் மாணவர்களுக்கு மிகவும் சிரமம் ஏற்பட்டது.

இதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் தமிழக மாணவர்களின் கேள்வி தாள்கள் தமிழில்தான் இருக்க வேண்டும் என்று மத்திய அரசுடன் போராடி எடுத்த நடவடிக்கையால் இந்தியாவிலேயே முதன் முதலாக கடந்த 2012 ஜூலை முதல் கேள்வித் தாள்களை தமிழில் தயாரித்து மத்திய அரசு வழங்கியது.

இதனால் மாணவர்களுக்கு கேள்விகளை தாய்மொழியில் எளிதாக புரிந்து கொள்ள வழிவகை செய்ததோடு பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாய் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் திகழ்ந்துள்ளார்கள்.

மாநிலத்தில் 10 புதிய தொழிற்பயிற்சி நிலையங்களை துவங்க அரசு உத்தேசித்துள்ளது. பயிற்சி நிலையங்கள் இல்லாத வட்டாரங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டு பெரும்பாலும் ஊரகப்பகுதிகளில், அந்தப் பகுதிகளில் அதிகப்படியாக உள்ள திறன் குன்றிய மனித வளத்தை திறன் பயிற்சி கொடுத்து மேம்பாடு அடைந்துள்ள பகுதியிலுள்ளவர்களுக்கு இணையாக உயர்த்தும் நோக்கில் ஊரக பகுதிகளான கருமாந்துறை, ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமருதூர், கொல்லிமலை ஆகிய ஐந்து இடங்களில் அமைப்பதற்கு நிர்வாக ஆணை வழங்கியும் வேப்பலோடை, போடி, திருவையாறு, ராதாபுரம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய ஐந்து இடங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களை துவங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் **5000** மாணர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்திறன் பயிற்சி ஐசிடி அகாடமி மூலம் வழங்கவும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் **13500** மாணவர்களுக்கு ஐசிடி அகாடமி மூலமாக நவீன தகவல் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கவும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் **20,000** மாணவர்களுக்கு ரூ. **6** கோடி செலவில் வேலைவாய்ப்பு பெற உதவிடும் வகையில் மென் திறன் பயிற்சி அளிக்கவும், கட்டுமான துறையில் அதிக வேலைவாய்ப்புகள் உள்ளதை கருத்தில் கொண்டு இராமநாதபுரம், தர்மபுரி, திருவண்ணாமலை, திருவள்ளூர் மற்றும் அரியலூர் ஆகிய **5** மாவட்டங்களில் **3500** நபர்களுக்கு கட்டுமான வேலை செய்பவர், குழாய் பொருத்துபவர், காங்கீரிட் கலவை தயாரிப்பவர் ஆகிய பிரிவுகளில் ரூ.**5.77** கோடி செலவில் பயிற்சி அளிக்கவும் மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஆரோக்கியமான தொழிலாளியே சிறப்பாக வேலை செய்யும் தகுதி படைத்தவர் என்பதால் நோய்வாய்படும் தொழிலாளர்களுக்கு சிகிச்சை பெறும் வகையில் 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் 10 முக்கிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் சித்த மருத்துவ பிரிவுகள் இயங்குகின்றன. மேலும் 10 அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் அமைக்க 2012–13–ல் ஆணை பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் அவைகள் இந்த ஆண்டிலே விரைவில் துவக்கப்படும்.

சென்னை அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேத பிரிவுகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன.

2012–13 ஆம் நிதியாண்டில் சிவகாசி, திருச்சி, சேலம், வேலூர் மற்றும் ஒசூர் ஆகிய 5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேத பிரிவுகளை துவக்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளதற்கிணங்க அவை இந்த ஆண்டிலே விரைவில் துவக்கப்படும்.

சென்னை அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒமியோபதி பிரிவு ஏற்கனவே இயங்கி வருகிறது. அதிக தொழிலாளர்களை கொண்ட கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஒமியோபதி பிரிவுகள் துவக்க 2012–13 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளதற்கிணங்க அவையும் இந்த ஆண்டிலே விரைவில் துவக்கப்படும்.

சென்னை அயனாவரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை தொழிலாளர்அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் புதிதாக யுனானி பிரிவுகள் துவக்க 2012–13 ம் நிதியாண்டில் ரூ. 2 கோடியே 54 லட்சத்து 98 ஆயிரத்து 920 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவை விரைவில் துவக்கப்படும்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்த நாட்டின் அரசு தன் மக்களுக்கு சிறந்த வகையில் மருத்துவமும் தரமான கல்வியும் வழங்க வேண்டும்.

இதனை கருத்தில் கொண்டு ராமநாதபுரம், பரமக்குடி, நிலக்கோட்டை, காங்கேயம், கொடைக்கானல், செய்யாறு, சத்தியமங்கலம், புஞ்சைபுளியம்பட்டி, சுல்தான்பேட்டை, வெள்ளக்கோயில், அரியலூர் ஆகிய ஊர்களில் வசிக்கும் 44,820 தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மருத்துவ சிகிச்சை

பெறும் வகையில் 11 அரசு ஈட்டுறுதி மருந்தகங்களை ரூ.6.75 கோடி செலவில் தொடங்க மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

'ஒரு மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமாக இயங்கும் பல்லடம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் கூடுதலாக 5911 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 'மூன்று மருத்துவர் வகை' தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகமாக தரம் உயர்த்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

25 வெவ்வேறு புதிய பகுதிகளில் வசிக்கும் 38,811 தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் வசதிக்காக அவரவர்கள் பகுதிக்கு அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைத்து மருத்துவ வசதி பெற மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள் ஆட்சியில் 2 ஆண்டுகளில் 19 புதிய அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் திறந்து வைக்கப்பட்டன. ஆனால் கடந்த 5 ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் 4 மருந்தரகங்கள் மட்டுமே திறந்து வைக்கப்பட்டன.

அதேபோல் கடந்த மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் பயன் பெற்றவர்கள் 13800 மட்டுமே. ஆனால் மாண்புமிகு **அம்மா** அவர்கள் ஆட்சியில் பயன்பெற்றவர்கள் 79330 ஆகும்.

கடந்த 5 ஆண்டு கால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் யோகாசன பிரிவு 3–ம், சித்தா பிரிவு 6 ஆக மொத்தம் 9 பிரிவுகள் மட்டுமே. ஆனால் மாண்புமிகு **அம்மா** அவர்களின் 2 ஆண்டு ஆட்சியில் யோகா 5, சித்தா 20, ஆயுர்வேத 8, ஓமியோபதி 3, யுனானி 3 என 39 பிரிவுகள் துவக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக ஒவ்வொரு துறையின் வளர்ச்சியிலும் அதிக கவனமும் அக்கரையும் எடுத்து மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறீர்கள் **அம்மா** நீங்கள். ஆனால் ஒருசிலர் தனது மக்களது நலனை மட்டும் கருத்தில் கொண்டு திட்டங்களை பாழ்படுத்தி வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

காவிரி நீரை தருவதில் துரோகம்,

கட்சத்தீவை தாரை வார்த்ததில் அநீதி,

முல்லை பெரியார் அணையில் அவலம்,

கடலில் பிழைக்கும் தமிழக மீனவர்களுக்கு

தினமும் படுகாயம், சிறைபிடிப்பு, படகு,

மீன் வலைகளுக்கு சேதம், இழப்பு இதோடு

இறப்பும் உண்டு,

அண்டை மாநிலத்தில் இருந்து மின்சாரம்

பெறுவதில் இடையூறு, உணவுத்

தானியம் வழங்குவதில் குறைப்பு,

ஏழைகளுக்கு உதவும்

மண்ணெண்ணெய் அளவில் குறைப்பு,

நிதி ஒதுக்கீட்டில் பெரும் அநீதி,

இன்னும் ஏராளம்! ஏராளம்! இத்தனையும்

யாருக்கு ? தமிழ்நாட்டுக்குத்தான்.

மத்திய அரசின் மாற்றான்தாய் மனப்பான்மை

மாறிட வேண்டும், அல்லது மாற்றப்பட வேண்டும்.

மாறிடும் காலம் கனிந்து வருகுது.

கனிவில், துணிவில், மொழி பல பேசுவதில்,

அறிவில், ஆற்றலில், அமைதியில், அறிவுத்திறனில்,

முன்னோடி சிந்தனையில், நாட்டுப் பற்றில்,

நாணயத்தில், நம்பிக்கையில், நாவன்மையில்,

நினைவாற்றலில், நிர்வாக திறமையில், திட்டமிடுதலில்,

செயல்பாட்டில், துயர் தீர்ப்பதில், பாதுகாப்பதில்,

நட்பு பாராட்டுவதில், உரிமையை பெறுவதில்,

உள்ளபடி உரைப்பதில், நெஞ்சுரத்தில், தியாக உள்ளத்தில்,

தாயுள்ளத்தில், தலைமைப் பண்பில், இவை அத்துணை

பண்புகளும் ஒருங்கே அமைய பெற்றவர்

இந்திய திருநாட்டை ஆளவேண்டும். இத்தனை பண்புகளும் கொண்டவர் தாங்கள் ஒருவர்தான் மாண்புமிகு **அம்மா** அவர்களே நீங்கள் மத்தியில் நாடாளும் நாள்தான், இந்நாட்டு தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத்து தமிழர்களுக்கு எல்லாம் விடிவு காலம்.

இங்கிலாந்து இந்தியாவை ஆண்டது

போனது போல,

இத்தாலி இந்தியாவை ஆளுவதை

அகற்ற வேண்டும்,

பொம்மை நாடாளுவதை அகற்றி,

உண்மை நீங்கள், நாடாளும் நாள்

வந்து விட்டது.

நான் மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருக்கும், இது நன்றாக தெரியும்.

மத்தியில் நீங்கள் ஆளும் காலமே

புவியில் இந்தியா வல்லரசாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தொழிலாளர் நலத்துறைக்கு இது வரையில் யாரும் செய்திடாத சாதனையாக பல்வேறு திட்டங்களை தந்துள்ள இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு **அம்மா** அவர்களுக்கு எனது கோடான கோடி நன்றி மலர்களை மாண்புமிகு **அம்மா** அவர்களின் பொற்பாதம் பணிந்து சமர்ப்பித்துக்கொள்வதுடன் இதயதெய்வம் **அம்மா** அவர்களின் ஒப்புதலோடு புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.